# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க,
# புகையிரத (திருத்தச்) சட்டம்

---

[1983, திசெம்பர் மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

1983, திசெம்பர் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

விலை ; சதம் 45 தபாற் செலவு : சதம் 60

**1983 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, புகையிரத (திருத்தச்) சட்டம்**

(1983 திசெம்பர் மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

ச. வ.—ஓ. 9/82 / 1516

**புகையிரதக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டமானது 1983 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, புகையிரத (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

200 ஆம் அத்தியாயத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**2.** இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் புகையிரதக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"இக்கட்டளைச் சட்டத்திலும் ஏதேனும் எழுத்திலான சட்டம் முதலியவற்றிலும் உள்ள சிலோன் அரசாங்கப் புகையிரதச் சேவை, சி. அ. பு., சிலோன் புகையிரதச் சேவைகள் என்பவற்றை இலங்கைப் புகையிரதச் சேவைகள், இ.பு., இலங்கைப் புகையிரதச் சேவைகள் எனப் பெயர் மாற்றஞ்செய்தல்.

2அ. இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் —

(1) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட, செய்யப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், தொடர்பில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் "சிலோன் அரசாங்கப் புகையிரதச்சேவை" என்ற சொல்லமைப்பு அல்லது அதன் சுருக்கக் குறியீடான "சி. அ.பு." அல்லது "சிலோன் புகையிரதச் சேவைகள்" என்ற சொல்லமைப்பு குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விடயத்துக்கேற்ப "இலங்கைப் புகையிரதச் சேவைகள்" என்ற சொல்லமைப்பு அல்லது அதன் சுருக்கக் குறியீடான "இ.பு." அல்லது "இலங்கைப் புகையிரதச் சேவைகள்" என்ற சொல்லமைப்பு பதிலிடப்படுதல் வேண்டும் ;

(2) இதனகத்துப்பின்னர் "அலுவலக முறைப் பொறிப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும் "இ.பு." என்ற எழுத்துக்களை ஆங்கில மொழியில் மட்டும், அல்லது ஆங்கில மொழியிலும் அவற்றுக்கு நிகரான சிங்கள, தமிழ் மொழிகளிலும், அல்லது அவற்றுக்கு நிகரான சிங்கள, தமிழ் மொழிகளில் மட்டும் கொண்டுள்ள ஏதே

னும் பொருள், இலங்கைப் புகையிரதச் சேவைகளின் ஆதனமென ஊகிக்கப்படு தல் வேண்டும் ; அத்துடன்

(3) இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் அலுவலக முறைப் பொறிப்பாக விருந்த "சி.அ.பு." என்ற எழுத்துக்களைக் கொண்டுள்ள ஏதேனும் பொருள், எல்லா நோக்கங்களுக்காகவும் இலங்கைப் புகையிர தச் சேவைகளின் ஆதனமென ஊகிக்கப் படுதல் வேண்டும்'.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, "தவ றென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன்" என்பதி லிருந்து "அத்தகைய குற்றப்பணத்துக்கும், மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்." என்பது வரையிலான எல்லாச் சொற் களுக்கும் பதிலாக, "தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது முந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்." என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ, 31ஆ, 31இ, 31ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின், 31 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என் பதுடன், இவை அச் சட்டவாக்கத்தின் 31அ, 31ஆ, 31இ, 31ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"இலங்கைப் புகையிரதச் சேவைகளின் ஆதனம் மீது சட்ட முறையற்றவகையில் அலுவலக முறைப் பொறிப்பை இடுவதற்கான தண்டம்.

31அ. இலங்கைப் புகையிரதச் சேவைகளின் ஆதனமாகவுள்ள பொருளொதன்மீதும் சட்டமுறை யான அதிகாரமின்றி, அலுவலகமுறைப் பொறிப்பை இடும் ஆளெவரும் தவறென்றுக்குக் குற்றவாளியா தல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன் னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றினால் அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலப் பகுதி யொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற் றண்டனையினால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப் படற்பாலராதலும் வேண்டும்.

இலங்கைப் புகையிரதச் சேவைகளுக்கு உரியதான பொருளொதனையும் மறைத்து வைக்கும் முன்னத்துடன் அலுவலகமுறைப் பொறிப்பை மாற்றுதல், உருவழித்தல், துடைத்தழித்தல் முதலியவற்றுக்கான தண்டம்.

31ஆ. இலங்கைப் புகையிரதச் சேவைகளின் ஆதனமாகவுமுள்ள பொருளொதனையும் மறைத்து வைக்கும் முன்னத்துடன் அலுவலகமுறைப் பொறிப்பை மாற்றும், உருவழிக்கும், துடைத்தழிக்கும் அல்லது வேறேதேனும் முறையில் அத்தகைய பொருளிலிருந்து அதனை மறையச்செய்யும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான இரு வகையிலொருவகை மறியற்றண்டனையினால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படற்பாலராதலும் வேண்டும்.

அலுவலக முறைப் பொறிப்பைக் கொண்டிருப்பதான பொருளொதனையும் சட்டமுறையான சாக்கின்றி பெறுதல், உடைமையில் வைத்திருத்தல், அல்லது வைத்திருத்தல் விற்றல் அல்லது ஒப்படைத்தல் என்பவற்றுக்கான தண்டம்.

31இ. அலுவலகமுறைப் பொறிப்பைக் கொண்டிருப்பதான பொருளொதனையும் சட்டமுறையான சாக்கின்றி பெறுகின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற, விற்கின்ற அல்லது ஒப்படைக்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படற்பாலராதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஆளொருவர் பொருளொன்றை அறிந்துகொண்டே வேறெவரேனும் ஆளினது உள்ளபடியான உடைமையில் அல்லது வைத்திருப்பில், அல்லது அவரால் இருப்பாட்சி செய்யப்படுவதான அல்லது அவ்வாறல்லாததான ஏதேனும் கட்டிடத்தில் அல்லது இடத்தில் வைத்திருந்து, அது அவ்வாறு அவரது சொந்தப் பயன்பாட்டுக்காக அல்லது நன்மைக்காக அல்லது இன்னொருவரது பயன்பாட்டுக்காக அல்லது நன்மைக்காக வைத்திருக்கப்படுமெனில், அது அவ்வாளின் உடைமையில் அல்லது வைத்திருப்பில் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

புகையிரதச் சேவைகளின் பொது முகாமையாளரின் அல்லது அதிகாரமளிக்கப் பட்ட அலுவலரின் சான்றிதழானது, ஆதனத்தின் சொத்துவம் பற்றிய சான்றாக அமைதல்.

31ஈ. ஏதேனும் குற்றவழக்குத் தொடுப்பில், அலுவலகமுறைப் பொறிப்பைக் கொண்டிருப்பதான பொருளெதுவும் இலங்கைப் புகையிரதச் சேவைகளின் ஆதனமா அல்லவா என்னும் வினா எழுமிடத்து, பொது முகாமையாளரின் அல்லது அதற்கென அவரால், எழுத்தில் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் கைப்பட்ட சான்றிதழொன்று, அப்பொருள் இலங்கைப் புகையிரதச் சேவைகளின் ஆதனமே என்னும் நிகழ்வுக்கான முதற்றோற்றச் சான்றுதல் வேண்டும்.".

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*